ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/26 - 2013 ජූනි මස 26 වැනි බදාදා - 2013.06.26

*1816/26 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதியுத்தமராம் மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால்**

*ச.அ.இல.: சிஎஸ்ஏ/7/8/14.*

*முத்திரை*

*மஹிந்த ராஜபக்ஷ.*

*1. இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு செயிட் இஸ்ரத் இமாம் அவர்கள்*
*2. திருவாளர் தம்மிக்க கித்துல்கொட அவர்கள்*
*3. இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதி அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து அவர்கள்*

*ஆகியோருக்கு*

*வாழ்த்துக்கள்*

*மாத்தளை பெரியாஸ்பத்திரி வளவில் சமையலறைக்கருகில் அகழ்வுப் பணிகளின்போது 2012 நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி சில மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாதலாலும், அது தொடர்பாக மேற்கொண்டு ஆராய்ந்து 2013 பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வரை செய்யப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது 155 மனித எலும்புக்கூடுகளை அல்லது அதனை அண்மிய எண்ணிக்கையில் கண்டுபிடிக்க முடிந்துள்ளதாதலாலும்,*

*சொல்லப்பட்ட மனித எலும்புக்கூடுகள் எந்த ஆட்களுடையவை, அவர்கள் எவ்வாறு மரணமடைந்தார்கள் மற்றும் எக்காலப்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்பது தொடர்பான குறிப்பான விடயங்கள் வெளிப்படவில்லையாதலாலும்,*

*அத்துடன், சொல்லப்பட்ட மனித எலும்புக்கூடுகளுக்குரிய உடல்கள் எக்காலப்பகுதியில் யாரால் எவ்வாறு அடக்கம் செய்யப்பட்டன, சொல்லப்பட்ட மனித எலும்புக்கூடுகள் எந்த ஆட்களுடையவை மற்றும் அவர்கள் எவ்வாறு மரணமடைந்தார்கள் என்பதை அடையாளங்காண்பது அவசியமாகியுள்ளதாதலாலும்,*

*அத்துடன், சொல்லப்பட்ட மனித உடல்கள் சட்டவிரோதமான ஒரு செயல் அல்லது செயல்களின் பெறுபேறாக அடக்கம் செய்யப்பட்டனவா, அவ்வாறாயின், யாதேனுமோர் ஆள் அல்லது ஆட்கள் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டுமா என்பது குறித்து ஆராய்வது அவசியமாகியுள்ளதாதலாலும்,*

*அத்துடன், இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும்பொருட்டு விசாரணைகளை மேற்கொள்வது பொதுமக்களின் பாதுகாப்புக்கும் நலனுக்கும் காரணமாக அமையக்கூடுமென்பது எனது அபிப்பிராயமாக இருக்கின்றதாதலாலும்,*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எக்கருமங்கள் தொடர்பில் விசாரணையொன்று எனது அபிப்பிராயப்படி பொதுமக்களின் நலனுக்கானதாக இருக்கின்றதோ, அக்கருமங்களாகவுள்ள இதனகத்துப் பின்னர் குறிப்பிடப்படும் கருமங்கள் தொடர்பாக விசாரணைசெய்யும் நோக்கத்திற்காக விசாரணை ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பது அவசியமானதென எனக்குத் தோன்றுகின்றதாதலாலும்,

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், உங்கள் விவேகம், திறமை, தற்சார்பு, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி சொல்லப்பட்ட,

1. இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு செயிட் இஸ்ரத் இமாம் அவர்கள்
2. திருவாளர் தம்மிக்க கித்துல்கொட அவர்கள்
3. இளைப்பாறிய மேல்நீதிமன்ற நீதிபதி அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து அவர்கள்

ஆகிய உங்களை, பின்வரும் கருமங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கு எனது ஆணையாளர்களாக இருக்கவென இத்தால் நியமிக்கின்றேன்.

1. மேலே சொல்லப்பட்ட மனித எலும்புக்கூடுகள் அத்துடன்/அல்லது அதற்குரிய உடல்கள் எக்காலப்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டன என்பதை அடையாளங்காணல்,

2. மேலே சொல்லப்பட்ட மனித எலும்புக்கூடுகள் எந்த ஆட்களுடையவை என்பதை அடையாளங்காணல்,

3. அவர்கள் மரணமடைந்த காலப்பகுதியும் எக்காரணத்தின்பேரில் எவ்வாறு மரணமடைந்தார்கள் என்பதை அடையாளங்காணல்,

4. அவர்கள் மரணமடைந்தது, சட்டமுறையற்ற ஒரு செயல் அல்லது செயல்கள் காரணமாகவெனில்,

   அ. அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய ஓர் ஆள் அல்லது ஆட்களை அடையாளங் காண்பதற்குப் போதிய நம்பகமான விடயங்கள் அல்லது சாட்சிகள்,

   ஆ. அவ்வாறு பொறுப்புக்கூறவேண்டுமென குறித்துரைக்கப்படும் ஆள் அல்லது ஆட்களுக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய சட்டமுறை நடவடிக்கைகள்,

   இ. அத்தகைய சட்டவிரோதமான செயல் அல்லது செயல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்,

   ஈ. அவ்வாறு மரணமடைந்தார்களென அடையாளங்காணப்படும் ஆட்களின் பெற்றோர்களுக்கும் வாழ்க்கைத்துணைகளுக்கும் தங்கிவாழ்வோருக்கும் அரசாங்கத்தின் பொறுப்பு என்ற வகையில் அளிக்கப்படவேண்டிய நிவாரணங்கள் எதுவுமிருப்பின் அத்தகைய நிவாரணங்கள்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட மாண்புமிகு செயிட் இஸ்ரத் இமாம் ஆகிய உங்களை, சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக இருக்கவென நான் இத்தால் நியமிக்கின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட ஆணையாளர்களான உங்களுக்கு மேற்போந்த கருமங்களைப் பற்றி அவசியமானதெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்துவதற்கும், அத்தகைய வேறு எல்லாப் புலனாய்வுகளைச் செய்வதற்கும் அதிகாரமளித்துத் தத்துவமும் வழங்குகின்றேன். அத்துடன், இதனுடன் சம்பந்தப்பட்ட உங்கள் விசாரணைகளின் காண்புகளையும் உங்கள் விதப்புரைகளையும் தருகின்ற அதன் மீதான அறிக்கையை தங்கள் கைப்பட இதனகத்துக் குறிப்பிடப்படும் திகதியிலிருந்து ஆறு (6) மாத காலத்துள் எனக்கு அனுப்பிவைக்குமாறு உங்களை இத்தால் தேவைப்படுத்துகின்றேன்.

அத்துடன், மேலே சொல்லப்பட்ட கருமங்கள் தொடர்பாக பகிரங்கமாக நடாத்தப்படக் கூடாதென உங்கள் தற்றுணிபின்பேரில் நீங்கள் தீர்மானிக்கக்கூடியவாறான ஏதேனும் விசாரணையில் அத்தகைய பாகம் அவ்வாறு நடாத்தப்படல் ஆகாது என இத்தால் நான் பணிக்கின்றேன்.

அத்துடன், உ ங்கள் விசாரணைகளின் அல்லது புலனாய்வுகளின் நோக்கத்திற்காக எந்தப் பகிரங்க அலுவலரிடமும், வேறெந்த ஆட்களிடமும் நீங்கள் உதவி அல்லது தகவல் கோருகின்றீர்களோ, அந்தப் பகிரங்க அலுவலர்கள் மற்றும் வேறு ஆட்கள் அனைவரையும் அதன் சார்பில் முறையாக அளிக்கப்படக்கூடியனவும் கொடுத்துவதப்படக்கூடியனவுமான அத்தகைய எல்லா உதவிகளையும் அளிக்குமாறும் அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவுமாறும் இத்தால் நான் தேவைப்படுத்திப் பணிக்கின்றேன்.

அத்துடன் மேலே சொல்லப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இந்த ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டுமென இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு யூன் மாதம் இருபதாம் நாளாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

லலித் வீரதுங்க,
சனாதிபதியின் செயலாளர்.

07-308

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.